வினா எண் 597, திரு. மா. சா. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல கேள்விக்கும் சேர்த்துப் பதில் சொல்லட்டுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கேள்வி எடுக்கப்பட வில்லை. உறுப்பினர் இருக்கையில் இல்லை. இரண்டாவது கேள்வி.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது முக்கியமான கேள்வியாக இருக்கிறதே என்று பார்த்தேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த உறுப்பினருடைய தொகுதியைப பற்றி இருப்பதால் மற்ற உறுப்பினர்களை அனுமதிப்பதற்கில்லை. பொதுக் கேள்வியாக இருந்தால் மற்ற உறுப்பினர்களுக்கு அனுமதி உண்டு. இது அவருடைய தொகுதி சம்பந்தப்பட்டது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி ; இது பொதுவான, முக்கியமான கேள்வியாக இருக்கிறது. எல்லோருக்கும் தெரிய வேண்டும் என்பதும் கூட.

முற்பகல் 9.55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, வினா எண் 596 திரு. ஆ. செல்லதுரைக்குப் பதிலாக, திருமதி ரமணி நல்லதம்பி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

596—

உடன்குடி அரசு மருத்துவ மனையில் பெண் மருத்துவர் நியமனம்.

*1320—திரு. ஆ. செல்லதுரை :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உடன்குடி அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் பெண் மருத்துவரை உடனடியாக நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பெண் மருத்துவரை நியமிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.